வன வள மற்றும் சுற்றாடல் அமைச்சு,
சம்பத்பாய,
ருஜமல்வத்த வீதி,
பத்தரமுள்ள.
10.08.2001.

அமைச்சு சுற்றறிக்கை இல:05/2001

வன பாதுகாவலர்,
எல்லா மாவட்ட செயலாளர்கள்,
எல்லா பிரதேச செயலாளர்கள்.

அரசாங்கத்தைச் சேர்ந்த ஏனைய காடுகளை முகாமைத்துவப் படுத்துதலும் நிர்வாகம் செய்வதற்குமாக வன பாதுகாவலருக்கு ஒப்படைத்தல்.

---

அரசாங்கத்தின் ஏனைய காடுகளை முகாமைத்துவப்படுத்தல் என்ற தலைப்பில் எனது இல.02/02/03/3011 யும் 01.07.1998 ம் திகதியையும் கொண்டுள்ள இலக்கம் 05/98 என்ற சுற்றறிக்கையை இத்தால் இரத்து செய்யும் அதே வேளையில் உடனடியாக செயல்படு படி இந்த சுற்றறிக்கையை வெளியிடப்படுகிறது.

02) இப்பொழுது இலங்கையில் உள்ள இயற்கை காடுகளை பிரதானமாக மூன்று நிருபணங்களினால் பரிபாலிக்கப்படுகின்றன. அதாவது வன பாதுகாப்பு திணைக்களம், வன ஜீவி பாதுகாப்பு திணைக்களம், மற்றும் பிரதேச செயலகங்கள் ஆகும். பாதுகாப்பு வனங்கள், திட்டமிடப்பட்ட பாதுகாப்பு வனங்கள், மற்றும் சில ஏனைய காடுகளை வன பாதுகாப்பு திணைக்களத்தினால் நிருவகிக்கப்படுகின்ற அதே வேளையில் கடும் இயற்கை பாதுகாப்பு, வன பூங்காக்கள், வன வழிகள், சரணாலயங்கள் மற்றும் இயற்கை பாதுகாப்பு வன ஜீவி பாதுகாப்பு திணைக்களத்தினால் நிர்வகிக்கப்படுகிறது. வன பாதுகாப்பு திணைக்களமோ வன ஜீவி பாதுகாப்பு திணைக்களத்தினாலோ நிர்வகிக்கப்படாத காடுகள் அரசாங்கத்தின் ஏனைய காடுகள் என பிரதே செயலாளரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்றன.

03) இப்பொழுது மாவட்ட செயலாளர்/பிரதேச செயலாளரின் கீழ் நிர்வகிக்கப்படுகின்ற எல்லா ஏனைய காடுகள் தேசிய வன கொள்கைக்கு ஏற்றபடி முகாமைத்துவ படுத்தல் அபிவிருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல் பொருட்டு வன பாதுகாப்பு திணைக்களத்திற்கு ஒப்படைக்கப்படுகின்றன. (அவ்வாறு இருந்த போதிலும் தேவையான சந்தர்பங்களில் மாவட்ட செயலாளர்களுக்கு/அரசாங்க அதிபர்களுக்கு மற்றும் பிரதேச செயலார்களுக்கு இந்த காடுகளின் பாதுகாப்பிற்காக வன கட்டளைச் சட்டத்தின் கீழ் வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களை செயல்படுத்துவதற்கு எதிர்காலத்தில் தடைகள் ஏதும் இருக்காது.)

பிரதேச செயலாளர் தனது அதிகார பிரதேசத்தில் இவ்வாறு விடுவிக்க உத்தேசித்துள்ள காணிகள் தொடர்பாக சிபாரிசை மேலே (1) ல் குறிப்பிட்டுள்ள குழுவிற்கு சமர்பிக்க வேண்டிய காரணத்தினாலும் இந்த நடவடிக்கை தடையின்றி நடைபெறுவதற்காகவும் பிரதேச செயலாளர் மட்டத்திலான உத்தியோகத்தர் கொண்ட தினை குழுவாக உபயோகித்துக் கொள்வது ஏற்றதாகும். காணிகளை அடையாளம் காண்பதற்காக நில அளவை திணைக்களத்தின் உதவியையும் பெற்றுக் கொள்ள வேண்டும். இவ்வாறு ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளுக்காக அடையாளம் காணப்படும் காணிகளின் எல்லைகளுடன் இத்துடன் இணைத்துள்ள படிவத்தின் பிரகாரம் பிரதேச செயலாளர் பிரிவு மட்டத்தில் பதிவு செய்து அமைச்சுக்களுக்கிடையான குழுவிற்கு சமர்பிப்பதற்காக எனக்கு அனுப்ப வேண்டும். அவ்வாறு விடுவிக்க உத்தேசிக்கப்பட்டுள்ள காணிகளுக்காக மாவட்ட காணி உபயோக குழுவின் அனுமதியை முதலில் பெற்றுக் கொள்ள வேண்டும். அமைச்சுகளுக்கு இடையிலான குழுவினால் இந்த வேண்டுகோளை கவனித்துப்பார்த்து ஏற்ற காணிகளை விடுவிக்க நடவடிக்கை எடுக்கப்படும். எதிர்காலத்தில் சமூக வன விஞ்ஞான, வக கருத்திட்டங்கள் மற்றும் காடுகளின் அபிவிருத்தி நடவடிக்கைகளுக்காக உத்தேசித்துள்ள அல்லது இப்பொழுது அவ்வாறான அபிவிருத்தி திட்டங்களுக்கு உள்ளடக்கப்பட்டுள்ள காணிகளையும் சரிவு 30 பாகைக்குக் கூடிய சரிவுகள் உள்ள காணிகள் சுற்றுாடல் என்ற முறையில் ஏற்றது அல்ல என குழுவினால் அடையாளம் கண்டுள்ள காணிகளையும் இந்த கணக்கில் /வகையில் உள்ளடக்கக்க கூடாது."

ஒப்பம்: ஜே.ஆர்.டப்லிவ்.திசாநாயக

செயலாளர்,

பிரதிகள்:

1. ஜனாதிபதி செயலாளர் )
2. பிரதமரின் செயலாளர் ) தகவலுக்காக
3. அமைச்சரவை செயலாளர் )
4. செயலாளர் - பொது நிர்வாக உள்நாட்டலுவல்கள் அமைச்சு